வால்பாறை நகராட்சியின் நகர்மன்ற கூட்டம் செப்படம்பர் மாதம் 30.09.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

முன்னிலை : திருமதி.செ.அழகுசுந்தரவள்ளி
நகர்மன்ற தலைவர்

**பொருள்: 1**

கோவை மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், நலத்திட்ட உதவிகள் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 24.08.2022 அன்று கோயம்புத்தூர் வருகையினையொட்டி நகராட்சி சார்பாக விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை கீழ்க்கண்ட அட்டவணைப்படி வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பத்திரிக்கையின் பெயர் | பட்டியல் தொகை |
|---|---|---|
| 1. | அம்மா எக்ஸ்பிரஸ் மாலை நாளிதழ் கோயம்புத்தூர் | ரூ.20000/- |
| 2. | மாலை முரசு நாளிதழ் கோவை | ரூ.32000/- |
| 3. | மக்கள் குரல் நாளிதழில் கோயம்புத்தூர் | ரூ.50400/- |
| 4. | தினமலர் நாளிதழில் கோயம்புத்தூர் | ரூ.24000/- |
| 5. | தினகரன் நாளிதழில், கல் பப்ளிகேஷன் | ரூ.48000/- |
| 6. | தினமணி நாளிதழில், எக்ஸ்பிரஸ் பப்ளிக்கேசன்ஸ், மதுரை பிரைட் லிமிடெட் | ரூ.53760/- |
| 7. | News Express, தினசரி மாலை நாளிதழ் கோயம்புத்தூர் | ரூ.37800/- |

**அலுவலக குறிப்பு:**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 280 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள்: 2**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்.1401/2021/அ1 நாள் 04.08.2022-ன்படி நகர்புற உள்ளாட்சி தேர்தலையொட்டி CCTV Streaming and Videography ஆகியவை அமைக்கப்பட்டுள்ளதினை தொடர்ந்து SNR Edatas Private Limited Hydrabad நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.199318/-யினை வழங்க தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்காணும் தொகையை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனமதி பெற்று வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 281 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள்: 3**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.4288/2022/கை1 நாள் 23.02.2022 தேதிய கடிதத்தின்படி கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 24.08.2022 தேதியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் வருகை புரிந்ததையொட்டி கூட்டத்தில் கலந்து கொண்ட நபர்களுக்கு அன்று மதிய உணவு ஏற்பாடு செய்த வகையில் இந்நகராட்சியின் சார்பாக ஃபேமஸ்குக் கேட்டரிங் சர்வீஸ் கோயம்புத்தூர் என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.157290/-யினை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. தொகை முன் அனுமதி பெற்று வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 282 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 4**

சொத்துவரி பொது சீராய்வு நடைமுறைப்படுத்தியதற்கான சிறப்பு அறிவிப்பு 19384 எண்ணிக்கை அச்சடித்து வழங்க குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள **ANGEL COMPUTER PRINTERS** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது. குறைந்த விலைப்புள்ளிக்கு நகர் மன்றத தலைவரின் முன்அனுமதியை ஏற்று பணி உத்திரவு வழங்கிடவும், அதற்கான தொகை வழங்கிடவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | சிறப்பு அறிவிப்பு எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1 | மலர் டிஜிட்டல் ஜெராக்ஸ், வால்பாறை | 19384 | 44584 அதிகம் |
| 2 | ANGEL COMPUTER PRINTER, வால்பாறை | 19384 | 38768 குறைவு |

**அலுவலக குறிப்பு:**

அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.384/2022/அ1**

**நகர மன்ற தீர்மானஎண். 283 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :5

வால்பாறை நகராட்சி 2022-2023ம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 24.08.2022-ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | Supply and delivery of Rain Coat, Blanket, Shoes in valparai Municipality. | 200000 | 1. M/s. Vinayaga & Co, Pollachi.<br>2. Ron-Lees Colour Box, Valparai. | மதிப்பீட்டு விலை<br>0.60% மதிப்பீட்டு விலை அதிகம் |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலைக்கே வழங்கிய M/s. Vinayaga & Co, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.585/2022/எச்1**

**நகர மன்ற தீர்மானஎண். 284 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் :6

| வ.எண் | பொருட்களின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | Supply and delivery of Multi colour stickers and Multi Colour Notice in valparai Municipality. | 650000 | 1. M/s. Thirunelveli District Multi Purpose Service Industrial Co-operative Society Limited, Thirunelveli.<br>2. M/s. Thoothukudi District Hi – Tech Printing and Allied Service Industrial Co-operative Society Limited, Kovilpatti | மதிப்பீட்டு விலை<br>10.34% மதிப்பீட்டு விலை அதிகம் |

வால்பாறை நகராட்சி 2022-2023ம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 26.08.2022ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலைக்கே வழங்கிய M/s. Thirunelveli District Multi Purpose Service Industrial Co-operative Society Limited, Thirunelveli. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.517/2022/எச்1**

**நகர மன்ற தீர்மானஎண். 285 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் :7**

வால்பாறை நகராட்சி 2022-2023ம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 11.08.2022ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | Supply and delivery of Covid -19 material in valparai Municipality. | 900000 | 1. M/s. Vinayaga & Co, Pollachi. | மதிப்பீட்டு விலை |
| | | | 2. Ron-Lees Colour Box, Valparai. | 6.22% மதிப்பீட்டு விலை அதிகம் |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலைக்கே வழங்கிய M/s. Vinayaga & Co, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.566/2022/எச்1**

**நகர மன்ற தீர்மானஎண். 286 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் :8

வால்பாறை நகராட்சி 2022-2023ம் ஆண்டு பொது நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 11.08.2022ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பொருட்களின் விபரம் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | Supply and delivery of Dengue control material in valparai Municipality. | 900000 | 1. M/s. Vinayaga & Co, Pollachi.<br>2. Ron-Lees Colour Box, Valparai. | மதிப்பீட்டு விலை<br>0.70% மதிப்பீட்டு விலை அதிகம் |

இப்பணிக்கு மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலைக்கே வழங்கிய M/s. Vinayaga & Co, Pollachi அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.566/2022/எச்1**

**நகர மன்ற தீர்மானஎண். 287 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :9

வால்பாறை தேயிலை தோட்ட தொழிற்சங்கங்களின் நிலையாணைகளின்கீழ் பணிபுரியும் தினக்கூலி தொழிலாளர்களுக்கு தொழில்வரி பிடித்தம் செய்வது தொடர்பான குழு கூட்டம் 16.08.2022 அன்று காலை 12.00 மணியளவில் சார் ஆட்சியர் அலுவலக கூட்ட நடவடிக்கை தீர்மானத்தில் "ஜனவரி 2023-ம் மாதம் வரை அரசிடமிருந்து மறு உத்தரவு வரும் வரை தினக்கூலி பணியாளர்களுக்கு தொழில்வரி பிடித்தம் செய்வதனை நிலுவையில் வைக்க கோரி பொள்ளாச்சி சார் ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஜனவரி 2023-ம் மாதம் வரை அரசிடமிருந்து மறு உத்தரவு வரும் வரை தினக்கூலி பணியாளர்களுக்கு தொழில்வரி பிடித்தம் செய்வதை நிலுவையில் வைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சார் ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.3743/2022/அ1 நாள் 18.08.2022-ம் தேதியுள்ள கூட்ட நடவடிக்கையில் "தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழில்வரி இரத்து செய்ய அல்லது தொழில்வரியை பாதியாக குறைக்க உரிய முன்மொழிகள் தயார் செய்து அரசுக்கு உடன் அனுப்ப நகராட்சி ஆணையாளரை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு :**

இந்நகராட்சி 01.10.2013 முதல் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு 30 சதவீதம் தொழில்வரி உயர்வு செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி ஐந்தாண்டுகள் முடிந்துவிட்டப்படியால் 01.10.2018 முதல் கீழ்கண்டவாறு தொழில்வரி திருத்தியமைக்கப்பட்டு நிர்ணயம் செய்யவும், வசூல் செய்யவும் இந்நகர்மன்ற தீர்மானம் எண்.32 நாள் 30.05.2018-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டு உரிய அறிவிப்புகள் சார்பு செய்ய தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| **வ. எண்** | **அரையாண்டு சராசரி மொத்த வருமானம் ரூ.** | **01.10.2013 முதல் வசூல் செய்யப்பட்டு வரும் தொழில்வரி தொகை** | **01.10.2018 மதல் 30% உயர்வு திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி தொகை** |
|---|---|---|---|
| 1. | ரூ.21000/- | இல்லை | இல்லை |
| 2. | ரூ.21000 முதல் ரூ.30000 வரை | ரூ.130.00/- | ரூ.169.00/- |
| 3. | ரூ.30000 முதல் ரூ.45000 வரை | ரூ.320.00/- | ரூ.416.00/- |
| 4. | ரூ.45000 முதல் ரூ.60000 வரை | ரூ.640.00/- | ரூ.832.00/- |
| 5. | ரூ.60000 முதல் ரூ.75000 வரை | ரூ.950.00/- | ரூ.1235.00/- |
| 6. | ரூ.75000-க்கு மேல் | ரூ.1270.00/- | ரூ.1250.00/- |

மேற்காணும் நிலைபாட்டை அரசிற்கு தெரிவித்து தக்க தெளிவுரை கோரிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் :**

தொழிலாளர் சங்க கூட்டமைப்பின் கோரிக்கை குறித்து பரிசீலனை செய்யக்கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பிடலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 288 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :10

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட எல்லைக்குட்பட்ட வால்பாறை நம்பர்-1 வட்டம், ஆனைமலை குன்றுகள் கிராமம் பொதுப்பணிக்கு சொந்தமான புலனாய் எண்.14/7 காலை 0.75 ஏக்கர் நிலம் முடீஸ் காவல் நிலையத்திற்கு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.24325/2013/ஆ4 நாள்: 07.10.2014- ன்படி முடீஸ் காவல் நிலையம் ஷேக்கல்முடி காவல்நிலையம் கட்டிடம் என மாற்றம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. **"முடீஸ்"** காவல் நிலையம் கட்டிடம் இனி **"ஷேக்கல்முடி"** காவல் நிலையம் கட்டிடம் என பயன்படுத்தப்படும். இதற்கு இந்நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணை இல்லை என சான்றிதழ் கூறி வருவாய் வட்டாட்சியர் வால்பாறை அவர்கள் கூறியுள்ளதை இம்மன்றத்தில் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்படி கட்டிடம் பெயர் மாற்றத்திற்கு ஆட்சேபணை இல்லை என சான்றிதழ் வழங்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 289 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் :11**

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட வால்பாறை வட்டம், ஆனைமலை குன்றுகள் கிராமம் பொதுப்பணிக்கு சொந்தமான புலனாய் எண்.9/2B காலையில் 36.48.5 ஹெக்டர் சோலையார் அணை பொதுப்பணித்துறை வகைப்படுத்தியுள்ள இடத்தினை, 0.66.5 ஹெக்டர் இடத்தினை மற்றும் உட்பிரிவு செய்து கட்டிடம் கட்டுவதற்கு சுகாதாரத் துறையினருக்கு நில மாற்றம் செய்வதற்கு உரிய விதிகளை பின்பற்றி நகர ஊரமைப்புத்துறை, துணை இயக்குநர் கோவை அவர்களுக்கு முறைப்படி விண்ணப்பித்து அனுமதிப்பெற்று கொள்வதற்கு இந்நகராட்சிக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை என்று நகரமன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்புவதற்கு வருவாய் வட்டாட்சியர் வால்பாறை அவர்கள் கூறியவற்றை இந்நகர் மன்றத்தில் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மேற்படி இடத்திற்கு நில உபயோக மாற்றம் செய்வதற்கு ஆட்சேபணை இல்லை என சான்றிதழ் வழங்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 290 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் :12**

கோவை மாவட்டம் வால்பாறை நகராட்சியில் நாட்டின் 75 வது சுதந்திர தின நிகழ்ச்சியை அமுத பெருவிழாவாக கொண்டாடவும் அதற்கான நிகழ்ச்சி முன் ஏற்பாடுகள் செய்ய வேண்டி இருப்பதால் நகராட்சி அலுவலகத்தில் மின் அலங்கார விளக்குகள் மேடை, பந்தல், ஒலி அமைப்பு மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள காந்திசிலைக்கு ஒளி மின்விளக்குகள் மற்றும் ஒலி அமைத்தல், அலுவலக சுற்றுச்சுவர் வர்ணம் பூசுதல் சேர், டேபிள் மற்றும் சுதந்திர தின முன்னேற்பாடுகள் செய்து கொள்ளவும் அதற்கான செலவு தொகை ரூ. 88000/- நகராட்சி பொதுநிதியிலிருந்து நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 291 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :13**

கோவை மாவட்டம் வால்பாறை நகராட்சியில் நாட்டின் 75 வது சுதந்திர தின நிகழ்ச்சியை அமுத பெருவிழாவாக கொண்டாடவும் அதற்கான நிகழ்ச்சி முன் ஏற்பாடுகள் செய்ய வேண்டி இருப்பதால் பேருந்து நிலையத்தில் உள்ள காந்திசிலைக்கு வர்ணம் பூசுதல் பணிக்கு ரூ.42 ஆயிரம் தொகை வழங்கவும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 292 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :14**

வால்பாறை நகராட்சியில் 14 வார்டு வாழைத்தோட்டம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள நல மையத்திற்கு மின் இணைப்பு பெறும் பொருட்டு மின்வாரிய கேட்புப்படி ரூ.12500 பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 293 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :15**

வால்பாறை நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் அம்மா உணவகத்தில் உள்ள குடிநீர் குழாய்கள் அனைத்தும் முற்றிலும் பழுதுபட்டு உள்ளது. அதற்குபதிலாக புதியதாக பைப் உபகரணங்கள் வாங்கி வேலைகள் செய்து கொடுக்க உத்தேச செலவினம் ரூ.30000 பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 294 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :16

வால்பாறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடங்களில் பழுதுபட்டு இருந்த மின் சர்வீஸ் ஒயர்கள் புதியதாக பொருத்தியதற்கும் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் பழுது பட்டுள்ள விளக்குகளை மாற்றுவதற்கும் உத்தேச செலவினம் ரூ.60000 நகர்மன்ற தவைரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1). நகராட்சி அலுவலக மும்முனை மின்இனைப்பு மற்றும் விளக்குகள் மாற்றி அமைத்தல்
2). ரொட்டிக்கடை நம்ம டாய்லெட் மின்இனைப்பு

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 295 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :17

வால்பாறை நகராட்சி 15வது வார்டு இஞ்சிப்பாறை பகுதியில் கரடி தாக்கி ஒருவர் படுகாயம் அடைந்து உள்ளதால் இரவு நேரங்களில் வனவிலங்குகளிடம் இருந்து பாதுகாத்துக்கொள்ள அந்த இடத்தில் இரண்டு தெருவிளக்கு வசதி வெய்து கொடுக்குமாறு பொதுமக்கள் நகர் மன்ற உறுப்பினர் மற்றும் நகர் மன்ற தலைவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொதுமக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில் இரண்டு தெருவிளக்குகள் அமைத்து கொடுக்க உரிய இடம் தேர்வு செய்யவும் அதற்கு ஆகும் செலவு தொகையை பொதுநிதியிலிருந்து மின் வாரியத்திற்கு செலுத்தி தெருவிளக்கு அமைத்து கொடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 296 அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் :18

NUHM மாநில சுகாதார அமைப்பு நிதியின் மூலம் வால்பாறை நகராட்சி பகுதியில் உள்ள சோலையார் நகர் பகுதியில் உள்ள சுகாதார மையத்தினை பாராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேலும் பணியை மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 297 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :19**

வால்பாறை நகராட்சி பகுதியில் உள்ள வட்டாட்சியர் வீட்டின் அருகில் கம்பி வேலி அமைக்கும் பணிக்கு ரூ.3.60 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது வட்டாச்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் பணி மேற் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 298 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் :20**

வால்பாறை நகராட்சியில் சாலை மற்றும் தடுப்புச்சுவர் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற மதிப்பீடுகள் தயார் செய்யப்பட வேண்டி புகைப்படம் மற்றும் திட்டப் பிரேரணைகள் தயார் செய்ய ரூ.20000/- நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 299 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :21**

வால்பாறை நகராட்சிக்குட்பட்ட ஸ்டேன்மோர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள படகு இல்லத்திற்கு காமராஜ் நகர் மற்றும் கக்கன் காலனி வழியாக உள்ள நீரோடை மூலம் வரும் நீரினை தேக்கி வைக்கப்பட்டுள்ளது. தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேற்படி படகு இல்லத்திற்கு வரும் நீரினை சுத்தப்படுத்தி வரும் கூடுதல் நீரினை நடுமலை ஆற்றில் கலக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே நகராட்சி குப்பை கிடங்கிற்கு அருகில் உள்ள ஆற்றின் ஓரம் புதிய நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டி Construction of Waste Water Treatment Plant using Decentralized advanced MBBR & Nano Bio-Ozolyte process for Civil components and Biological mechanical components @ Valparai Municipality ரூ.48,00,000/- மற்றும் Construction of waste treatement plant using Decentralized Advanced MBBR & Nano Bio-Ozolyte process for Biological mechanical components @ Valparai Municipality ரூ.44,00,000/-க்கு 29.04.2022 அன்று நகர்மன்ற அனுமதி பெறப்பட்டது.

மேற்படி பணியில் இரண்டையும் ஒன்றிணைத்து 2022-2023 ஆம் ஆண்டின் Schedule of Rate – க்கு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. பொதுநிதியின் கீழ் பணி மேற்கொள்ள நகர்மண்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | Construction of Waste Water Treatment Plant using Decentralized advanced MBBR & Nano Bio-Ozolyte process for Civil components and Biological mechanical components @ Valparai Municipality | ரூ.105.00 இலட்சம் |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 300 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் :22**

கோவை மாவட்டம் வால்பாறை நகராட்சியில் 04.09.2022 அன்று ஸ்ரீ விநாயகர் சதுர்த்தி பண்டிகைக்கு விநாயகர் சிலை கரைக்கும் இடத்தில் மின்விளக்குகள் மற்றும் Generator உபகரணங்கள் பயன்படுத்திய வகையில் கலை சவுண்ட் சர்வீஸ் & ஆடியோஸ், வால்பாறை அவர்களுக்கு செலவினத்தொகை ரூ.7000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 301 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 23**

வால்பாறை நகராட்சி பொது சுகாதார பிரிவு தூய்மை பணியாளர்கள், மேற்பார்வையாளர், ஓட்டுநர்கள், இரவு காவலர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களுக்கு ஆண்டு தோறும் தீபாவளி பண்டிகைக்கு 1 செட் சீருடையும், பொங்கல் பண்டிகைக்கு 1 செட் சீருடையும் இத்துடன் தையல் கூலியும் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது 2022-23ம் ஆண்டுக்கு 2 செட் சீருடை மற்றும் தையல் கூலி வழங்குவதற்கு பணியாளர்களின் விபரம்

| வ. எண் | விபரம் | இனம் | ஜோடி | சேலை | ஜாக்கெட் | துண்டு | பேண்ட் | சட்டை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர்கள் | பெண்கள் 13x2 | 26 | 26 | 26 | 26 | --- | --- |
| 2 | தூய்மை பணியாளர்கள் | ஆண்கள் 25x2 | 50 | --- | --- | 50 | 50 | 50 |
| 3 | மேற்பார்வையாளர் | ஆண் - 2x2 | 4 | --- | --- | 4 | 4 | 4 |
| 4 | ஓட்டுநர் | ஆண் - 1 | 2 | --- | --- | 2 | 2 | 2 |
| 5 | அலுவலக உதவியாளர்கள் | ஆண் - 1 | 2 | --- | --- | 2 | 2 | 2 |
| 6 | இரவு காவலர் | ஆண் - 1 | 2 | --- | --- | 2 | 2 | 2 |
| **மொத்தம்** | | **43** | **86** | **26** | **26** | **86** | **60** | **60** |

மேற்படி பணியாளர்களுக்கு சீருடைகள் மற்றும் தையற்கூலி தொகை வழங்குவதற்கு ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதியும் அதற்கு ஏற்படும் செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 302 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் :24**

வால்பாறை நகராட்சி கொரோனா நோய் மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு பணிகளுக்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளீசிங் பவுடர் பொதுமக்கன் நலன் கருதி பயன்படுத்த தேவைபட்டியல் கீழ்கண்டவாறு.

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நீர்த்த சுண்ணாம்பு | 10000 Kg |
| 2. | பிளீசிங் பவுடர் | 5000 Kg |

மேற்படி பட்டியலில் காணும் பொருட்களை கொள்முதல் செய்து பணியாளர்கள் பணிகளை மேற்கொள்ளவும் அரசு நிர்ணயம் செய்த விலைப்புள்ளி மற்றும் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் விநியோகம் பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 303 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் :25

இந்நகராட்சிக்குட்பட்ட 3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பொருள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

வால்பாறை நகராட்சி எல்லைக்குள் பல்வேறு தலைவர்கள் காமராஜர் சிலை, அண்ணாசிலை, காந்திசிலை, இந்திராகாந்தி சிலைகள் ஏற்கனவே உள்ளன. எனவே இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கிய சட்ட மாமேதை டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலை அமைக்கப்பட வேண்டும் என்பது வால்பாறை நகர மக்கள் அனைவரின் விருப்பமாக உள்ளது. ஆனால் இது நாள் வரை இந்த கோரிக்கை நிறைவேற்றப்படாமல் உள்ளது. தற்போது மூன்றாவது வார்டு உறுப்பினர் செ.வீரமணி அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையை சிறப்பினமாக கருதி ஏற்கனவே உள்ள அண்ணாதிடல் வளாகத்திற்குள் செயல்பட்டு வரும் அண்ணா பூங்கா இடத்தில் சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ சிலையை அமைப்பதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் கோரிக்கையினை அரசின் அனுமதி வேண்டி கருத்துருவாக அனுப்பி தக்க ஆணை பெற மன்றம் தீர்மானிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 304 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் :26

வால்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டதை ஜே.சி.பி இயந்திரம் மூலம் அகற்றுவதற்கு உத்தேச செலவின தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். மேலும் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரருக்கு அதே மதிப்பீட்டு விலையில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர மன்ற தீர்மானஎண். 305 அனுமதிக்கப்படுகிறது**